# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1760/40 - 2012 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.05.31

*1760/40 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.-பீ.7/2001.*

***1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்***

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*ஜீ. எல். பீரிஸ்,*
*வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, மே 30.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.*

*2. பயங்கரவாதத்தை முறியடிப்பதற்குப் பரந்தளவினவான செயல்நுணுக்கங்களையும், குறிப்பாகத் தலிபான் என அறியப்படுவதும், (ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய எமிரேட் எனவும் தன்னை அழைத்துக்கொள்வதுமான) ஆப்கான் குழுவுக்கெதிராக விதிக்கப்படவேண்டிய வழிமுறைகளையும் எடுத்துக்கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 (1999) என்பதும், மற்றும் 1526 (2004), 1617 (2005), 1735 (2006), 1822 (2008), 1904 (2009), 1988 (2011) மற்றும் 1989 (2011) என்பனவுட்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்களின்மூலம் தீர்மானத்தின் தடைசெய் தொகுதிக்கான திரிபுபடுத்துகைகளும் வலுப்படுத்துகையும், (இதனகத்துப்பின்னர் "பெயர்குறிக்கப்பட்ட ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரும்), தடைசெய் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட "திரட்டிய நிரலில்" அவரது பெயர் காணப்படுகின்றவரும், தடைசெய் குழுவினால் பெயர்குறிக்கப்பட்டவாறு அல்-கைதாவுடன் அல்லது தலிபானுடன் இணைந்துள்ளவருமான அல்லது இணைந்துள்ளதுமான எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது ஏதேனும் உருவகத்துக்குத் தடைசெய் வழிமுறைகளை ஏற்புடையனவாக்குவதற்கான கடப்பாட்டுத் தொடரை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின்மீது சுமத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை, ஐக்கிய நாடுகள் சபையினது பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ் செயலாற்றி, 1999, ஒற்றோபர் 15 ஆந் திகதியன்று தீர்மானம் 1267 (1999) என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.*

3. இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோள்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 என்பதனை பந்தி 4 (ஆ) வின் கீழும் தொடர்புபட்ட பந்திகளின்கீழும் நிதிகளை முடக்குதல் தொடர்பான கடப்பாடுகளையும், மற்றும் மேற்கூறப்பட்ட அடுத்துப்பின்னரான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தரப்பட்டுள்ள திரிபுபடுத்துகைகளையும் வலுப்படுத்துகையையும், குறிப்பாக 1988 (2011) மற்றும் 1989 (2011) என்ற தீர்மானங்களின் 1 ஆம் பந்தியையும் இலங்கையினுட் செயற்படுத்துவதனை வசதிப்படுத்துதலும், அதன்மூலம் மேற்கூறப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான வழிவகையொன்றைக் குறித்துரைத்தலுமாகும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் இருத்தல் வேண்டும் ; அவர் பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, பொதுமக்களுக்குத் தகவல் வழங்கும் நோக்கத்துக்காக, பின்வருவனவற்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும் :-

(அ) இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்தபின்னர் உடனடியாக முதலாவது திரட்டிய நிரல், அத்துடன்

(ஆ) அத்தகைய நிரலுக்கான எவையேனும் அடுத்துப்பின்னரான திருத்தங்கள் செய்யப்படுவதன்மேல் உடனடியாக அத்தகைய திருத்தங்கள் ;

5. பெயர் குறிக்கப்பட்டவோர் ஆளுக்கு அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காகவும் அவர்சார்பிலும், அல்லது அவரது பணிப்பின்மீது வேறெவரேனுமாளுக்கு அல்லது உருவகத்துக்குச் சொந்தமான, அல்லது அவரினால் அல்லது அதனால் முழுமையாக அல்லது கூட்டாகச் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட, வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எவையேனும் நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை ஆளெவரும் கையாளுதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், எவரேனுமாள், கணக்கின்மீது வருமதியாகவுள்ள வட்டியை அல்லது வேறு ஈட்டுகைகளை அல்லது கணக்கு முடக்கப்பட்டதாக வருமுன்னர் செய்துமுடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் என்பவற்றின்கீழ் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை, அல்லது மூன்றாந்திறத்தவரொருவரினால் கணக்குக் கைமாற்றப்பட்ட ஏனைய நிதிகளை, அவ்வாறு வரவுவைக்கப்பட்ட நிதிகளும் முடக்கப்பட்டனவாகவிருக்கும்வரை, முடக்கப்பட்டவொரு கணக்குக்கு வரவுவைக்கலாம்.

6. ஆளெவரும், பெயர்குறிக்கப்பட்ட ஓர் ஆளுக்கு, அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காகவும் அவர்சார்பிலும், அல்லது அவரின் பணிப்பின்மீது வேறெவரேனும் ஆளுக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அவரின் அல்லது அதன் நன்மைக்காக, எவையேனும் நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கிடைக்கக்கூடியனவாக்குதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஆளொருவர், கணக்கின் மீது வருமதியாகவுள்ள வட்டியை அல்லது வேறு ஈட்டுகைகளை அல்லது கணக்கு முடக்கப்பட்டதாக வருமுன்னர் செய்துமுடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் என்பவற்றின்கீழ் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை, அல்லது மூன்றாந்திறத்தவரொருவரினால் கணக்குக்குக் கைமாற்றப்பட்ட ஏனைய நிதிகளை, அவ்வாறு வரவுவைக்கப்பட்ட நிதிகளும் முடக்கப்பட்டனவாகவிருக்கும்வரை, முடக்கப்பட்டவொரு கணக்குக்கு வரவுவைக்கலாம்.

7. இலங்கையிலுள்ள, அல்லது இலங்கை நாட்டவராக அல்லது இலங்கையில் வதிபவராக உள்ள ஆளொருவர், குழுவினர் அல்லது உருவகம் தடைசெய் குழுவினால் பெயர்குறிக்கப்பட்டுள்ளார் அல்லது பெயர்குறிக்கப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைக்கப்பெற்றதன் மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, பெயர்குறிக்கப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக, பின்வரும் நிகழ்வுபற்றி, அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவிப்பதற்கு நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும் :-

(i) பெயர்குறிப்பும் அதன் சிக்கல்களும் ;

(ii) மீளாய்வு நடவடிக்கைமுறையும் நிரலிலிருந்து அகற்றுவதற்கான நடைமுறைபற்றிய தகவலும் ;

(iii) பெயர்குறிப்புக்கான காரணங்கள் சம்பந்தமாகப் பகிரங்கமாக வெளிவிடத்தக்க தகவல்.

8. ஏழாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாள், தடைசெய் குழுவினால் பெயர்குறிப்பானது நிரலிலிருந்து அகற்றப்படுவதனைக் கோருவதில் உதவிக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்த அதிகாரி அவ்வேண்டுகோளைத் தடைசெய் குழுவுக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 (1999) மற்றும் மேற்கூறப்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்கள் என்பவற்றின் நியதிகளின்படி பெயர்குறிக்கப்பட்ட ஆட்களை நிரலிலிருந்து அகற்றுதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்களில் தரப்பட்டுள்ள நியமங்களுக்கும் நடவடிக்கைமுறைகளுக்கும் ஒத்ததாகவுள்ளவொருமுறையில் அதன்மீது செயலாற்றுதலும் வேண்டும்.

*9. (1)* தகுதிவாய்ந்த அதிகாரி, அவ்வாறு செய்வதற்கான தமது உட்கருத்துப்பற்றித் தடைசெய் குழுவுக்கு அறிவிப்பு வழங்கியபின்னரும் தடைசெய் குழுவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகிய பின்னரும், குறிப்பிட்ட நிதிகள் விடுவிக்கப்படக்கூடியவகையில் அல்லது சொத்துக்கள் கிடைக்கக்கூடியனவாக்கப்படக்கூடியவகையில், 5 ஆம் அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியிலுள்ள தடையொன்றை நீக்குவதற்குக் குறிப்பிட்ட அதிகாரவளிப்பொன்றை வழங்கலாமென்பதுடன், அவ்வதிகாரவளிப்புத் தொடர்பில் தோதான நிபந்தனைகள் பற்றியும் முடிபு செய்யலாம்.

*(2)* தடைசெய் குழுவின் தேவைப்பாடுகளுக்கிணங்க அவ்வதிகாரவளிப்பானது எந்நேரத்திலேனும் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானங்கள் 1452, 1735 மற்றும் 1904 என்பவற்றிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 மற்றும் மேற்கூறப்பட்ட அடுத்துப்பின்னரான தீர்மானங்களைப் பின்பற்றி முடக்கப்பட்டுள்ள நிதிகளை அணுகுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் வேறெவையேனும் தீரமானங்களிலும் தரப்பட்டுள்ள நியமங்களுக்கும் நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

*10. (1)* தாம் பெயர்குறிக்கப்பட்ட ஆளல்லவென உரிமைகோருகின்ற ஆளொருவர், அத்தகைய ஆள் தடைசெய் குழுவின் திரட்டிய நிரலில் பெயர் காணப்படுகின்ற ஆளல்லவெனக் கூறுகின்ற சான்றிதழொன்றை வழங்கும்படி வேண்டுகோள்விடுத்து தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, அது தொடர்பில் தோதானவாறாகவுள்ள அத்தகைய விசாரணைகளைச் செய்வதன்மேல், மற்றும் விண்ணப்பக்காரர் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரல்லவென நிலைநாட்டப்படின், விண்ணப்பக்காரருக்குச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

*(2)* தகுதிவாய்ந்த அதிகாரி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு சான்றிதழை வழங்க மறுப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, அதற்கான காணரங்களுடன் தமது முடிபை அவர் விண்ணப்பக்காரருக்கு அறிவித்தல் வேண்டும்.

*11.* பத்தாம் ஒழுங்குவிதியின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அதனை மீளாய்வதற்காக, அம்முடிபு அவருக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள், மேல் நீதிமன்றத்துக்கு அத்தகைய முடிபுக்கெதிராக விண்ணப்பிக்கலாம்.

*12.* எவரேனுமாள், எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆள்தொடர்பாக 5 ஆம், 6 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் கடப்பாட்டுடன் சேர்த்து மேலதிகமாக -

(அ) ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது வாடிக்கையாளர்கள், அல்லது அவர் வேறெந்த ஆளுடன் தொழில்புரிந்துள்ளாரோ அந்த வேறு எவரேனுமாள், அல்லது அவர் அறிந்துள்ள வேறெவரேனுமாள் பெயர்குறிக்கப்பட்டவோர் ஆளாக அல்லது ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளின்சார்பில் செயலாற்றுகின்ற ஆளொருவராக உள்ளாரென அவர் அறிந்திருந்தால் அல்லது சந்தேகித்தால், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) பின்வருவன பற்றி, விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்குத் தகவல் வழங்குதல் வேண்டும் ;

(i) நிதிகளின் நிலைமை, 5 ஆம், 6 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழான முடக்குதல் நடவடிக்கைகள் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறெவையேனும் நடவடிக்கைகள் ;

(ii) பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக, அல்லது நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக இயைபான நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட, அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின், ஏனைய நிதிசார் சொத்துக்களின் அல்லது பொருளாதார மூலவளங்களின் தன்மையும் தொகையும் அல்லது அளவும் ; அத்துடன்

(iii) இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை வசதிப்படுத்தக்கூடிய வேறேதேனும் தகவல் ;

(இ) இத்தகவலின் ஏதேனும் சரிபார்த்தலில் விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரியுடன் அல்லது நிதிசார் உளவறிதற் கூறுடன் ஒத்துழைத்தல்.

(2) இவ்வொழுங்குவிதிக்கிணங்க வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் தகவல், அது எந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிக்கிணங்கத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவகையாக விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாட்டின் மீறுகையொன்றாகக் கொள்ளப்படுதலாகாது.

13. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழான கடப்பாடொன்றைப் பின்பற்றி, (5) ஆம் அல்லது (6) ஆம் ஒழுங்குவிதியின் கீழ் முடக்குதல் நடவடிக்கையொன்றுக்கமைந்தனவாகவுள்ள நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை வைத்திருக்கின்ற எவரேனுமாள், எந்த ஆளின் நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் முடக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளுக்கு, அத்தகைய முடக்குதல் நடவடிக்கை பற்றியும் முடக்குதலை நீக்கும்படி கோருவதற்குக் கிடைக்கக்கூடிய நடவடிக்கைமுறைகள் பற்றியும் அறிவிப்பு வழங்குவதற்கு, முடக்குதல் பயனுறுத்தப்பட்ட பின்னர், நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(2) நிதிகளை வைத்திருக்கும் ஆள், நிதிசார் உளவறிதற் கூறுக்கு உடனடி அறிவிப்பு வழங்குதலும் வேண்டும். நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய நிகழ்வுபற்றி உடனடியாகத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழான அறிவிப்பு, அத்தகைய முடக்குதலிலிருந்து இரண்டு வாரங்களினுள் பாதிக்கப்பட்ட ஆளின் சட்டரீதியான வாழிடத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) முடக்குதலினால் பாதிக்கப்பட்ட ஆள் இலங்கைக்கு வெளியே வாழுரிமை கொண்டிருந்தால், முடக்குதல் நடவடிக்கை பற்றிய அறிவித்தல், சேர்ப்பிப்புச் செய்யப்படுவதற்கான வேண்டுகோளுடன் பாதிக்கப்பட்ட ஆள் எந்த நாட்டில் வாழுரிமைகொண்டுள்ளாரோ அந்த நாட்டின் அரசாங்கத்துக்கு, தகுதிவாய்ந்த அதிகாரிக்கான வேண்டுகோளின்மூலம், வழங்கப்படுதல் வேண்டும்.

14. இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடப்பாடொன்றினைப் பின்பற்றி, 5 ஆம் அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழான முடக்குதல் நடவடிக்கைக்கு அமைந்தனவாகவுள்ள நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை வைத்திருக்கின்ற எவரேனுமாள், முடக்குதல் நடவடிக்கைக்கு முன்னர் எந்நேரத்திலேனும், பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு, அவரது அல்லது அதன் நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் முடக்கப்படவுள்ளன அல்லது சொத்துக்கள் கிடைக்கக்கூடியன வாக்கப்படமாட்டாதென அறிவித்தல் வழங்குவதிலிருந்து தடைசெய்யப்படுதலும் வேண்டும் .

15. (1) இவ்வொழுங்குவிதிகளின் 5, 6 அல்லது 14 ஆகிய ஒழுங்குவிதிகளில் எடுத்துக்கூறப்பட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் 12 ஆம் அல்லது 13 ஆம் ஒழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

16. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் அமைச்சர், இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடப்பாட்டின் மீறுகைக்கு அல்லது நிகழக்கூடிய மீறுகைக்கு இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது தகவலைத் தோதாள சட்ட வலுவுறுத்தல் முகவர் நிலையங்களுக்கும், நிறுவனங்களின் விடயத்தில், நிர்வாகத்தடைகள் விதிக்கப்படவேண்டுமா அல்லவாவென்பதைக் கவனத்துட்கொள்வதற்காக அவ்வவற்றின் மேற்பார்வை அதிகாரிகளுக்கும் ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, சட்ட வலுவுறுத்தல் முகவர் நிலையங்களுடனும், நிதிசார் உளவறிதற் கூறுடனும், மேற்பார்வை அதிகாரிகளுடனும் மற்றும் வேறு தோதான முகவர் நிலையங்களுடனும் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனைக் கண்காணிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புபட்ட தடைகளை வலுவுறுத்துவதற்காகவும் செயற்படுத்தப்படவேண்டிய திட்டமொன்றை அபிவிருத்தி செய்தலும் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி இவ்வொழுங்குவிதிகளின்கீழ் செயல்முறைகளைச் செயற்படுத்துவதற்காகவும் கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் பணிப்புரைகளை வழங்கலாம்.

17. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக :-

"திரட்டிய நிரல்" என்பது, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 (1999) என்பதன் நியதிகளின்படி தடைசெய் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிரல் என்று பொருளாகும் என்பதுடன், 1999 ஆம் ஆண்டிலிருந்து செய்யப்பட்ட அத்தகைய நிரலுக்கான எவையேனும் அடுத்துப்பின்னரான திருத்தங்களையும் உள்ளடக்கும் ;

"கையாளுதல்" என்பது, நிதிகள் மற்றும் ஏனைய நிதிசார் சொத்துக்கள் தொடர்பில், விடயமுகாமையுட்பட, அளவு, தொகை, அமைவிடம், சொத்தாண்மை, உடைமை, பண்பு அல்லது சேரிடம் என்பவற்றிலான ஏதேனும் மாற்றத்தை விளைவிக்கக்கூடியவாறு பயன்படுத்துவதற்கு, மாற்றுவதற்கு, அசைப்பதற்கு, அணுகக்கூடியனவாக்குவதற்கு, கைமாற்றுவதற்கு அல்லது வேறேதேனும் வழியில் கையாள்வதற்கு, அல்லது அத்தகைய நிதிகளும் சொத்துக்களும் பயன்படுத்தப்படுவதனை இயலச் செய்யக்கூடிய வேறேதேனும் மாற்றத்தைச் செய்வதற்கு இயன்றதாகவிருத்தல் ; பொருளாதார மூலவளங்கள் தொடர்பில் மூலவளங்களை விற்பனை செய்தல், வாடகைக்குவிடுதல் அல்லது ஈடுவைத்தல் என்பன மூலமுட்பட, எவ்வழியிலும், நிதிகளை, பண்டங்களை அல்லது சேவைகளைப் பெறும்வகையில் கொடுத்துமாற்றுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு இயன்றதாகவிருத்தல் என்று பொருளாகும் ;

"நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும் ;

"முடக்குதல்" என்பது, நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களைக் கையாள்வதனை அல்லது கையாள்வதற்கு அவற்றைக் கிடைக்கக்கூடியனவாக்குவதனைத் தடுக்கும் வகையிலான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் என்று பொருளாகும் ;

"நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள்" என்பது, எவ்வாறாயினும் பெறப்பட்ட உருவ அல்லது அருவ, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஒவ்வொரு வகையினவையுமான சொத்துக்களையும், வங்கி வரவுகள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகளும் கடன் பத்திரங்களும் என்பனவுட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், அத்தகைய சொத்துக்களுக்கான உரித்துக்கு, அல்லது அவற்றிலான அக்கறைக்குச் சான்றளிக்கின்ற, இலத்திரனியல் அல்லது டிஜிட்டல் உட்பட்ட எப்படிவத்திலுமான சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :-

(i) எல்லா வட்டியும், பங்கிலாபங்களும் அல்லது வேறு வருமானமும் அல்லது அத்தகைய நிதிகளிலிருந்து சொத்துக்களிலிருந்து அல்லது பொருளாதார மூலவளங்களிலிருந்து திரளுகின்ற அல்லது தோற்றுவிக்கப்பட்ட பெறுமதியும் ;

(ii) நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட நிதிகள், சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் ;

இவை, ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளினால், அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காகவும் அவர்சார்பிலும், அல்லது அவரின் பணிப்பின்மீது எவரேனும் ஆளினால் அல்லது உருவகத்தினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றன, வைத்திருக்கப்படுகின்றன அல்லது முழுமையாக அல்லது கூட்டாகச் சொந்தமாகவைத்திருக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன; பொருளாதார மூலவளங்கள் என்பது, நிதிகளாகவிராதனையும், ஆனால் நிதிகளை, பண்டங்களை அல்லது சேவைகளைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படமுடியுமானவையுமான ஒவ்வொரு வகையினவான சொத்துக்களை உள்ளடக்குதலும் வேண்டும் ;

"உருவகம்" என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு, நம்பிக்கைப் பொறுப்பு, பங்காண்மை, நிதியம், கூட்டிணைக்கப்படாத கழகம் அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் ;

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154 ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் என்று பொருளாகும் ;

"நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும் ;

"ஆள்" என்பது, (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"தடைசெய் குழு" என்பது,-

(அ) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1267 (1999) மற்றும் 1989 (2011) என்பவற்றைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட குழு, அல்- கைதா மற்றும் இணைந்துள்ள ஆட்களுக்கும் உருவங்களுக்குமான தடைகள் தொடர்பான பொறுப்பைக் கொண்டுள்ள அல் - கைதான தடை செய் குழு ;

(ஆ) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1988 (2011) மற்றும் 1989 (2011) என்பவற்றைப் பின்பற்றித் தாபிக்கப்பட்ட குழு, தலிபானுக்கான தடைகள் தொடர்பான பொறுப்பைக் கொண்டுள்ள தலிபான் தடைசெய் குழு ; அல்லது

(இ) அத்தகைய இரு குழுக்களும் ;

என்று பொருளாகும்.

6- 594

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.